සියලුම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

## தமிழ் மொழியும் இலக்கியமும் - දෙමළ භාෂාව හා සාහිත්‍ය

தரம் : **8** நேரம்: 2 மணித்தியாலம்

| பெயர் /சுட்டெண்: |
|---|

**பகுதி** I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக
- மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1) பறவைகள் யாவும் இரண்டு கண்களை உடையன. இங்கு கண்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
   1) சென்னி 2) நயனம் 3) இமை 4) கயல்

2) 'தெய்வம் தந்து திப்பியம் ஆயது….'' என்பதில் திப்பியன் என்பதன் பொருள்,
   1) திவ்யம் 2) உணவு 3) சுவர்க்கம் 4) விதி

3) அல்லும் பகலும் ஆராய்ந்தான் ஐயம் தீர்க்க வழிகாணான். இதில் ஐயம் என்பதன் எதிர்க்கருத்து,
   1) தெளிவு 2) பிச்சை 3) சந்தேகம் 4) பயம்

4) தெலுங்கு மொழியின் சொற்கள் இனிமையான இசை உடையவை. இங்கு இசை என்பதன் எதிர்க்கருத்து,
   1) நசை 2) பாட்டு 3) வசை 4) கீதம்

5) அதிகமான பாடல்களைப் பெற்றுள்ளவன் அரக்கர் கோமான். இங்கு கோமான் என்பதன் எதிர்ப்பாற் சொல்,
   1) கோமானி 2) கோமாட்டி 3) கோமாச்சி 4) கோமாள்

6) யானைக்குப் பிடி என்பது போல நரிக்கு
   1) பிணை 2) ஓரி 3) பாட்டி 4) பெட்டை

7) கத்தரியின் வித்து விதை என்பது போல ஆமணக்கின் வித்து,
   1) விதை 2) முத்து 3) மணி 4) பருப்பு

8) Microphone (மைக்ரோ போன்) என்பதன் தமிழ் வடிவம்,
   1) ஒலிவாங்கி 2) ஒலிபெருக்கி
   3) கையடக்கத்தொலைபேசி 4) நுண்தொலைபேசி

9) பத்தாண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா,
   1) காகித விழா 2) தசம விழா 3) சகாப்பதம் 4) தகர விழா

10) கன்றுக்குட்டி துள்ளித் துள்ளி அங்குமிங்கும் ஓடியது. இங்கு அங்குமிங்கும் என்பது,

1) அடுக்குத்தொடர் 2) இரட்டைக்கிளவி
3) அடுக்கிடுக்குத்தொடர் 4) இணைமொழி

11) 'அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது" என்ற பழமொழியின் கருத்து

1) சந்தர்ப்பத்தை தவறவிடாதே
2) தான் செய்தது தனக்கே தீமை
3) முடிந்தவற்றை எண்ணுவதில் பயனில்லை
4) முடிந்த விடயம் மீண்டும் திரும்பி வரும்

12) நீர் மேல் குமிழி போல என்ற உவமைத் தொடரின் கருத்து,

1) பிரயோசனமற்றது 2) பகை உணர்வு
3) நிலையற்ற தன்மை 4) இல்லாத ஒன்று

13) 'கடன் கழித்தல்" என்ற மரபுத்தொடரின் கருத்து,

1) கடனைக் கழித்தல் 2) மனமின்றிச் செய்தல்
3) அவதானமாகச் செய்தல் 4) ஏமாற்றுதல்

14) எனக்கு காலையில் இருந்து தலை வலிக்கிறது. இவ்வாக்கியத்தின் எழுவாய்,

1) எனக்கு 2) காலை 3) தலை 4) வலிக்கிறது

15) மண்வெட்டி என்பது,

1) காரணப்பெயர் 2) இடுகுறிப்பெயர்
3) காரணஇடுகுறிப்பெயர் 4) இடுகுறி காரணப்பெயர்

16) கவியில் சிறந்தவன் கம்பன். இங்கு 'இல்" எனும் வேற்றுமை உருபு ஏற்றுள்ள பொருள்,

1) நீங்கல் 2) எல்லை 3) ஒப்பு 4) ஏது

17) 'அரசு அழிக' - இவ்வாக்கியத்தில் வியங்கோள் வினை எப்பொருளில் வந்துள்ளது

1) வாழ்த்துதல் 2) விதித்தல் 3) வைதல் 4) வேண்டல்

18) தம்பி வேகமாய் ஓடிச் சென்றான். இங்கு 'ஓடி' என்பது,

1) பெயரெச்சம் 2) வினையெச்சம் 3) வினைமுற்று 4) தெரிநிலை வினை

19) தகவல் என்பது எம்மொழிக்குரிய திசை சொல்,

1) அரபு 2) கன்னடம்
3) தெலுங்கு 4) போர்த்துக்கீசமொழி

20) அவன் நன்றாகப் பாடினான். இங்கு பாடினான் என்பது

1) படர்க்கை ஒருமை பெயர்ச்சொல் 2) படர்க்கை பன்மை வினைமுற்று
3) படர்க்கை ஒருமை வினைமுற்று 4) முன்னிலை ஒருமை வினைமுற்று

(40 புள்ளிகள்)

## பகுதி II

- முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை வரைக.
   1) வாசிப்பு மனிதனை பூரணமாக்கும்
   2) கண்டோர் வியக்கும் மலையகம்
   3) சூழலைப் பாதுகாப்போம்
   4) உடைந்த கைத்தொலைப்பேசியின் சுயசரிதை

   (20 புள்ளிகள்)

2. உமது பாடசாலையின் புதிய கட்டடத்திறப்பு விழாவிற்குரிய அழைப்பிதழ் ஒன்றைத் தயாரிக்குக.

   (10 புள்ளிகள்)

3. பின்வரும் வாக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.
   i. சுறுசுறுப்பான சிறுவன் கடினமான வினாக்களையும் விரைவாகச் செய்தான்
   ii. பாசமான அம்மா சிறப்பு மிக்க கோயிலுக்கு சென்று பணிவாக வணங்கினாள்
   iii. அழகான சிலையை சிற்பி மெதுவாக செதுக்கினான்
   iv. நீல வானில் வெம்மையான சூரியனை கருமையான மேகங்கள் மறைத்தன.
   v. சின்னஞ் சிறு சிறுமிகள் வண்ண வண்ண பூக்களை அழகாக பறித்தார்கள்

| எழுவாய் | எழுவாய் அடைமொழி | செயற்படு பொருள் | செயற்படு பொருள் அடைமொழி | பயனிலை | பயனிலை அடைமொழி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

4. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1) ‘உயிர் இரக்கம்’’ எனும் பாடத்தில் குறப்பிடப்படும் நான்கு கடவுள்களையும் அவர்களுக்குரிய வாகனங்களையும் தருக.
   2) இந்த உலகம் ஒரு நாடகசாலை எனக்கூறிய அறிஞர் யார்?
   3) ‘பசிப்பிணி தீர்த்த பாவை’’ என அழைக்கப்படுவர் யார்?
   4) ஜவகர்லால் நேருவுக்கு மிகவும் பிடித்தமான நூலாசிரியர் யார்?
   5) ஆக்கிமிடிசினால் கண்டு பிடிக்கப்பட்ட விதி யாது? (10 புள்ளிகள்)

5. பின்வரும் இணைப்பிடைச் சொற்களை வைத்துப் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக.
   1) ஆனால் 2) ஆகவே 3) ஆனாலும்

6. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1) வாக்கியம் என்றால் என்ன?
   2) ஏவல் வினை என்றால் என்ன? உதாரணம் தருக.
   3) பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
   4) இறந்த கால இடைநிலைகள் நான்கினைத் தருக.
   5) ஆறாம் வேற்றுமைக்குரிய உருபு, பொருள் என்பவற்றை தருக. (10 புள்ளிகள்)

7. பின்வரும் கவிதையை வாசித்து, அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

*தமிழர்க்கு தமிழ் மொழியிற் சுவடிச்சாலை*
*சர்வகலா சாலையைப் போல எங்கும் வேண்டும்.*
*தமிழிலிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல*
*தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்*
*அமுதம் போல் செந்தமிழிற் கவிதை நூற்கள்*
*அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்*
*சுமைசுமையாய் சேகரித்துப் பல்கலைசேர்*
*துறைதுறையாய்ப் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்*

1) சுவடிச்சாலை எவ்வாறு இருக்க வேண்டும் என கூறப்படுகிறது?
2) செந்தமிழ் கவிதை நூல்கள் எதைப் போன்றது என ஆசிரியர் கூறுகிறார்?
3) சுவடிச்சாலையில் நூல்கள் எவ்வாறு அடுக்கி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்?
4) பின்வரும் சொற்களுக்கு பொருள் தருக.
   1) சுவடிச்சாலை
   2) சர்வகலாசாலை

(10 புள்ளிகள்)